South East London
Integrated Care System

NHS
South East London



Tamil

# உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தை இப்போதும், எதிர்காலத்திலும் பாதுகாக்க உதவுங்கள்

தடுப்பூசிகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு
selondonics.org/childrenshealth

# குழந்தைகளுக்குத் தடுப்பூசிகள் தேவைப்படுவது ஏன்?

**தடுப்பூசிகள் குழந்தைகளை அவர்கள் மிகவும் சிறுகுழந்தைகளாக இருக்கும்போதும், அவர்களின் பள்ளிப் பருவத்திலும், மற்றும் அவர்கள் பெரியவர்களாக இருக்கும் போதும், கடுமையான நோய்களிலிருந்தும், அதிக ஆபத்தான நோய்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. உலகளாவிய ரீதியில், தடுப்பூசிகள் மில்லியன் கணக்கான உயிர்களைக் காப்பாற்றியுள்ளன. இருப்பினும், மக்கள் தடுப்புமருந்துகள் போடுவதை நிறுத்தினால், தொற்று நோய்கள் மீண்டும் விரைவாக பரவும் சாத்தியம் உள்ளது.**

## தடுப்பூசிகள் எவ்வாறு செயற்படுகின்றன?

தடுப்பு மருந்துகள் ஒரு தொற்றுநோயைப் பின்பற்றி அதனைப்போன்றே தொழிற்படுவதன் மூலம் (உடலினுள் வைரஸ் அல்லது பாக்டீரியா போன்ற ஒரு கிருமியின் படையெடுப்பு மற்றும் வளர்ச்சி )உடலினுள் செயல்படுகின்றன. மேலும் நோயிலிருந்து பாதுகாக்கும் ஆன்டிபாடிகள் (antibodies ) எனப்படும் சிறப்புப் போராளிகளை உருவாக்குவதற்கு உடலைத் தயார் செய்கின்றன.

நோய்தொற்றுக்கு உள்ளாகியபின் குணப்படுத்துவதை விட, தடுப்பூசி மூலம் இதைக் கற்றுக்கொள்வது உடலுக்கு மிகவும் பாதுகாப்பான முறையாகும். தடுப்பூசி மூலம் ஒரு குறித்த நோயை எவ்வாறு எதிர்த்துப் போராடுவது என்பதை உடல் கற்றுக்கொண்டவுடன், அது பல ஆண்டுகளுக்கு அந்நோயிலிருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாக்கும்.

## பல்வேறுபட்ட நோய்கள் மற்றும் பிணிகளிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல்

உலக சுகாதார அமைப்பின் (World Health Organization - www.who.int) படி தடுப்பூசிகள் ஒவ்வொரு ஆண்டும் டிப்தீரியா, டெட்டனஸ், கக்குவான் இருமல், காய்ச்சல் மற்றும் தட்டம்மை போன்ற நோய்களால் ஏற்படக்கூடிய 3.5 மில்லியனுக்கும் அதிகமான இறப்புகளைத் தடுக்கின்றன.

இங்கிலாந்தில் தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, மில்லியன் கணக்கான மக்களைக் கொல்லக்கூடிய அல்லது முடக்கக்கூடிய பெரியம்மை மற்றும் டெட்டனஸ் போன்ற நோய்கள் இப்போது முற்றாக மறைந்துவிட்டன அல்லது மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அம்மை மற்றும் டிப்தீரியா போன்ற பிற நோய்கள் அவற்றின் தடுப்பூசிகள் அறிமுகப் படுத்தப்பட்டதிலிருந்து சுமார் 99.9% வரை குறைக்கப்பட்டுள்ளன.

**இருப்பினும், மக்கள் தடுப்புமருந்துகள் போடுவதை நிறுத்தினால், தொற்று நோய்கள் மீண்டும் விரைவாக பரவும் சாத்தியம் உள்ளது.**

## இந்தத் துண்டுப்பிரசுரம் எதைப் பற்றியது?

NHS இல் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும் தடுப்பூசிகள் (தடுப்பு மருந்துகள் என்றும் அழைக்கப்படும்) மற்றும் அவற்றை எப்போது எடுக்க வேண்டும் என்பது பற்றி இந்த துண்டுப்பிரசுரம் விரிவாக விளக்குகிறது. சிறப்பான நோய்ப் பாதுகாப்பிற்காக தடுப்பூசிகள் சரியான நேரத்தில் வழங்கப்படுவது முக்கியம் ஆகும், இருப்பினும் உங்கள் பிள்ளை ஏதாவதொரு தடுப்பூசியை தவறவிட்டிருந்தால், அதை எடுக்க  உங்கள் மருத்துவரை தொடர்பு கொள்ளலாம்.

# என் குழந்தைக்கு எந்த வயதில் வழக்கமான தடுப்பூசிகள் தேவை?

| வயது | தடுப்பூசி | பாதுகாப்பு அளிக்கிறது |
|---|---|---|
| 8 வாரங்கள் | **1 தடுப்பூசியில் 6 மருந்து** (1வது டோஸ்) | – **டிப்தீரியா, ஹெபடைடிஸ் பி, ஹிப்** (ஹீமோபிலஸ் இன்ஃப்ளுயன்ஸா வகை பி), **போலியோ, டெட்டனஸ், கக்குவான் இருமல்** (பெர்டுசிஸ்) |
| | **ரோட்டா வைரஸ் தடுப்பூசி** (1வது டோஸ்) | – **ரோட்டா வைரஸ்** |
| | **மென் பி தடுப்பூசி** (1வது டோஸ்) | – **மெனிங்கோகோகல் குழு B பாக்டீரியா** |
| 12 வாரங்கள் | **1 தடுப்பூசியில் 6 மருந்து** (2வது டோஸ்) | – (மேலே காண்க) |
| | **ரோட்டா வைரஸ் தடுப்பூசி** (2வது டோஸ்) | – (மேலே காண்க) |
| | **மென் பி தடுப்பூசி** (2வது டோஸ்) | – (மேலே காண்க) |
| 16 வாரங்கள் | **1 தடுப்பூசியில் 6 மருந்து** (3வது டோஸ்) | – (மேலே காண்க) |
| | **நிமோகாக்கால் (PCV) தடுப்பூசி** (1வது டோஸ்) | – **ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா** |
| 1 ஆண்டு | **எம்.எம்.ஆர்.தடுப்பூசி** (1வது டோஸ்) | – **தட்டம்மை, சளி, ரூபெல்லா** |
| | **நிமோகாக்கால் (PCV) தடுப்பூசி** (2வது டோஸ்) | – **ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா** |
| | **மென் பி தடுப்பூசி** (3வது டோஸ்) | – (மேலே காண்க) |
| 18 மாதங்கள் | **எம்.எம்.ஆர். தடுப்பூசி** (2வது டோஸ்) | – **தட்டம்மை, சளி, ரூபெல்லா** |
| | **6 in 1 தடுப்பூசி** (ஜனவரி 2026 முதல்) | – (மேலே காண்க) |
| 2-16 ஆண்டுகள் | **காய்ச்சல் தடுப்பூசி** (ஒவ்வொரு வருடமும்) | – **காய்ச்சல்** (இன்ஃப்ளுயன்ஸா) |
| 3 ஆண்டுகள்& 4 மாதங்கள் | **1 தடுப்பூசியில் 4மருந்து** (முன்பள்ளி பூஸ்டர்) | – **தொண்டை அழற்சி, டெட்டனஸ், கக்குவான் இருமல், போலியோ** |
| 12-13 ஆண்டுகள் | **எச்பிவி தடுப்பூசி** | – **மனித பாப்பிலோமா வைரஸ்** |
| 14 ஆண்டுகள் | **1 தடுப்பூசியில் 3 மருந்து** (டீனேஜ் பூஸ்டர்) | – **டெட்டனஸ், டிப்தீரியா, போலியோ** |
| | **மெனாக்வை (MenACWY) தடுப்பூசி** | – **மூளைக்காய்ச்சல், செப்டிசீமியா** |

# இந்தத் தடுப்பூசிகள் என் குழந்தையை எந்த நோய்களிலிருந்து பாதுகாக்கின்றன?

## MMR (தட்டம்மை, கூகைக்கட்டு, ரூபெல்லா)

தட்டம்மை (Measles) மற்றும் ரூபெல்லா போன்றன பொதுவாக தடிமல் போன்ற அறிகுறிகளுடன் தொடங்கும், அதைத் தொடர்ந்து தோலில் தடிப்பு அல்லது சொறி ஏற்படும். சில அரிதான சந்தர்ப்பங்களில், தட்டம்மை நோயானது குருட்டுத்தன்மை, நிமோனியா மற்றும் மூளைக்காய்ச்சல் (meningitis) ஆகியவற்றிற்கு வழிவகுக்கலாம். மேலும் சில சமயங்களில் இது மரணத்தையும் ஏற்படுத்தலாம். கர்ப்பமாக இருப்பவர்களுக்கு ஏற்படும் ரூபெல்லா மிகவும் ஆபத்தானது, இது கர்ப்பதிலுள்ள குழந்தைக்குப் பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. கூகைக்கட்டானது முகத்தின் பக்கவாட்டில் வலிமிகுந்த வீக்கத்தை ஏற்படுத்துகிறது. மேலும் சில அரிதான சந்தர்ப்பங்களில் இது வைரஸால் ஏற்படக்கூடிய மூளைக்காய்ச்சலுக்கும் வழிவகுக்கும்.

## MenB + MenACWY

மெனிங்கோகோகல் (Meningococcal) நோய்த்தொற்றுகள் மிகவும் தீவிரமானவை. இவை மூளைக்காய்ச்சல் (meningitis) மற்றும்இரத்த விஷத்தை (செப்சிஸ்-sepsis) ஏற்படுத்தக்கூடியவை. அரிதான சந்தர்ப்பங்களில், அவை உயிருக்கே ஆபத்தானவையாக ஆகலாம்.

## நியுமோகோகல் (Pneumococcal)

நியூமோகாக்கல் நோய்த்தொற்றுகள் தீவிரமானவை, மேலும்இவை நிமோனியா, செப்சிஸ் மற்றும் மூளைக்காய்ச்சலுக்கும் வழிவகுக்கலாம்.

## டெட்டனஸ்

டெட்டனஸ் என்பது ஒரு தீவிரமான, உயிருக்கு ஆபத்தான நிலை, இது பாக்டீரியாக்கள் காயத்திற்குள் செல்வதால் ஏற்படுகிறது. இது விறைப்பான தாடை, வலிமிகுந்த தசைப்பிடிப்பு, சுவாசிப்பதில் சிரமம், அதிக வெப்பநிலை, வியர்வை, வேகமான இதயத் துடிப்பு மற்றும் வலிப்புத்தாக்கங்களை ஏற்படுத்தும்.

## கக்குவான் இருமல் (பெர்டுசிஸ் என்றும் அழைக்கப்படுகிறது)

கக்குவான் இருமல் (Whooping cough)என்பது நுரையீரல் மற்றும் மூச்சுக்குழாய்களில் ஏற்படும் தொற்று ஆகும். இது குழந்தைகளையும் சிறு பிள்ளைகளையும் மிகவும் நோய்வாய்ப்படுத்தக் கூடியது. அரிதான சந்தர்ப்பங்களில், இது மரணத்தையும் ஏற்படுத்தலாம்.

## ரோட்டா வைரஸ் (Rotavirus)

ரோட்டா வைரஸ் (Rotavirus) என்பது மிகவிரைவாகத் தொற்றக்கூடிய வயிற்றுக் கிருமியாகும், இது பொதுவாகக் குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளைப் பாதிக்கின்றது. இது வயிற்றுப்போக்கு, வாந்தி, வயிற்று வலி மற்றும் அதிக உடல் வெப்பநிலையை ஏற்படுத்துகிறது.

## போலியோ (Polio)

போலியோ லேசான, காய்ச்சல் போன்ற அறிகுறிகளை ஏற்படுத்தலாம் ஆனால் அரிதான சந்தர்ப்பங்களில் போலியோ காரணமாக தசைகள் பலவீனம் (முடக்கம்) ஏற்படலாம்.

## டிஃப்தீரியா (Diphtheria)

டிஃப்தீரியா என்பது மூக்கு மற்றும் தொண்டை மற்றும் சில நேரங்களில் தோலை பாதிக்கும் ஒரு தீவிரமான நோய்த்தொற்று ஆகும். இது விரைவாக சிகிச்சையளிக்கப்படாவிட்டால், குறிப்பாக குழந்தைகளுக்கு இவை உயிருக்கே ஆபத்தானவொன்றாகும்.

## ஹெப் B (Hep B)

ஹெபடைடிஸ் பி (Hepatitis B ) என்பது பொதுவாக 1 முதல் 3 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய கல்லீரல் தொற்று ஆகும், பெரும்பாலான மக்களுக்கு இதற்கான அறிகுறிகள் இருப்பதில்லை, அல்லது லேசான அறிகுறிகள் மட்டுமே இருக்கும். ஆனால் அரிதான சந்தர்ப்பங்களில் இது நாள்பட்டதாக மாறி 6 மாதங்களுக்கும் மேல் நீடிக்கலாம். உரிய சிகிச்சையளிக்கப்படாவிட்டால் நாள்பட்ட ஹெப் பி ஆனது மிக ஆபத்தானது.

## Hib B

ஹீமோபிலஸ் இன்ஃப்ளுயன்ஸா டைப் b (Haemophilus influenzae type b - Hib) என்பது உயிருக்கு ஆபத்தான நோய்த்தொற்றுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு வகை பாக்டீரியா ஆகும். இதனால் குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகள் தீவிரமாக நோய்வாய்ப்படும் அபாயத்தில் உள்ளனர்.

## காய்ச்சல் (Flu)

குழந்தைகளுக்கு காய்ச்சல் மிகவும் விரும்பத்தகாத ஒரு நோயாகும். இது மூச்சுக்குழாய் அழற்சி மற்றும் நியூமோனியா ( bronchitis and pneumonia) போன்ற நுரையீரல் மற்றும் காற்றுப்பாதைகளை பாதிக்கும் கடுமையான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

## HPV

மனித பாப்பிலோமா வைரஸ் (Human papillomavirus- HPV) என்பது மிகவும் பொதுவான வைரஸ்களின் குழுவிற்கு கொடுக்கப்பட்ட பெயர் ஆகும். அவற்றில் சில "அதிக ஆபத்துடையவை" என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவை கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் (cervical cancer), குதப் புற்றுநோய் (anal cancer), பிறப்புறுப்பு புற்றுநோய்கள் (genital cancers) மற்றும் தலை மற்றும் கழுத்தில் ஏற்படக்கூடிய புற்றுநோய்கள் போன்றவற்றின் வளர்ச்சியுடன் தொடர்புடையவை. மற்றைய வகைகள் மருக்கள் அல்லது வெருகாஸ் (verrucas) போன்ற நிலைமைகளை ஏற்படுத்தலாம்.

# குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதால் ஏற்படும் பக்கவிளைவுகள் என்ன?

**10% க்கும் குறைவான குழந்தைகள் தடுப்பூசி போட்ட 2 அல்லது 3 நாட்களுக்கு இலேசான பக்கவிளைவுகளை அனுபவிக்கின்றனர்.**

சில உள்ளடக்ககூடிய பக்கவிளைவுகள்:

- **தடுப்பூசி உட்செலுத்தப்பட்ட இடத்தைச் சுற்றி வீக்கம், சிவத்தல் மற்றும் புண் போன்ற நோவு உணர்வு.**
- **உடல்நிலை சரியில்லாமல் இருப்பது அல்லது அதிக வெப்பநிலையை உருவாக்குவது**
- **உள வருத்தமாக உணர்தல், அதிகரித்த அழுகை அல்லது எரிச்சல், அமைதியின்மை**
- **வாந்தி மற்றும் தற்காலிக பசியின்மை**

சில குழந்தைகள் வேறு சில அரிதான பக்கவிளைவுகளை அனுபவிக்கலாம் - உதாரணமாக MMR தடுப்பூசியின் வழங்கப்படும் ஒவ்வொரு 24,000 டோஸ்களிலும் 1 டோஸிற்கு ஒரு வகை சொறி (rash) ஏற்படுகிறது.
அரிதான பக்க விளைவுகள் பற்றி மேலும் அறிந்துகொள்ள உங்கள் GP யிடம் பேசுங்கள்.
தட்டம்மை, கூகைக்கட்டு மற்றும் ரூபெல்லா (measles, mumps and rubella) போன்ற தொற்று நோய்களின் காரணமாக ஏற்படக்கூடிய சிக்கல்கள் மிகவும் தீவிரமானவை என்பதை நினைவில் கொள்வது அவசியமாகும்.

## எனது குழந்தை இதுபோன்ற அல்லது வேறு பக்க விளைவுகளை அனுபவித்தால் நான் என்ன செய்ய வேண்டும்?

குழந்தைகளுக்கு பாராசிட்டமால்(paracetamol) மூலம் இலேசான பக்கவிளைவுகளை குணப்படுத்தச் செய்யலாம். உதாரணம்: கால்போல் (Calpol) நீங்கள் கவலைப்பட்டாலோ அல்லது உங்கள் பிள்ளைக்கு ஏதேனும் பக்கவிளைவுகள் இருந்தால், உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.



# தடுப்பூசிகளில் என்ன இருக்கின்றன, மேலும் அவை பாதுகாப்பானவையா?

## தடுப்பு மருந்துகள் எவற்றைக் கொண்டிருக்கின்றன ?

எந்தவொரு தடுப்பு மருந்தினதும் முக்கிய மூலப்பொருளானது குறித்த நோயை உண்டாக்கும் கிருமியின் சிறிய அளவான கொல்லப்பட்ட அல்லது பலவீனமான அல்லது தயாரிக்கப்பட்ட பதிப்பாகும். இவை எதிரியாக்கிகள் (antigens) எனப்படும். சில புதிய வகைத் தடுப்பு மருந்துகள் ஆன்டிஜெனை செலுத்துவதைக் காட்டிலும், ஆன்டிஜென்களை உடலானது தாமாகவே உற்பத்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கொண்டிருக்கின்றன.

தடுப்பு மருந்துகள் சில சமயங்களில் தடுப்பு மருந்தைப் பாதுகாப்பானதாகவும் பயனுள்ளதாகவும் மாற்றும் வேறு சில மூலப் பொருட்களையும் கொண்டிருக்கின்றன.

## தடுப்பு மருந்துகளில் ஏதேனும் பன்றி இறைச்சிசார் மூலப்பொருட்கள் உள்ளதா?

சில தடுப்பு மருந்துகளில் பன்றி இறைச்சி ஜெலட்டின் உள்ளது, இது தடுப்பு மருந்துகளின் சேமிப்பின் போது பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் இருக்க சேர்க்கப்படுகிறது. மதம் அல்லது உணவுக் காரணங்களுக்காக உங்கள் பிள்ளைக்கு பன்றி இறைச்சி ஜெலட்டின் அடங்கிய தடுப்பு மருந்து போடுவதை நீங்கள் விரும்பவில்லையெனில், அதற்கு சாத்தியமான மாற்று வழிகளைப் பற்றி உங்கள் சுகாதார நிபுணரிடம் பேசுங்கள்.

## தடுப்பு மருந்துகள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பானதா?

ஐக்கிய இராச்சியம் (UK) மற்றும் உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான குழந்தைகள் கடுமையான நோய்கள் மற்றும் பிணிகளுக்கு எதிராக தடுப்பு மருந்துகளைப் பெற்றுள்ளனர் - அதன் விளைவாக பல்வேறு நோய்களிலிருந்தும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனர். தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்வது உங்கள் குடும்பம், நண்பர்கள் மற்றும் நீங்கள் சார்ந்த சமூகத்தையும் பாதுகாக்கிறது, குறிப்பாக சமூகத்திலுள்ள மிகவும் இலகுவாக பாதிக்கப்படக்கூடியவர்கள் இதன்மூலம் பாதுகாக்கப் படுகின்றார்கள்.

அனைத்து தடுப்பூசிகளும் அவை அறிமுகப்படுத்தப்பட்ட முன்பு சட்டத்தின்படி கடுமையான பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இங்கிலாந்தில் தடுப்பூசி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டதும், அது மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒழுங்குமுறை ஏஜென்சி (Medicines and Healthcare products Regulatory Agency - MHRA) மூலம் அதனால் ஏற்படக்கூடிய ஏதேனும் அரிதான பக்க விளைவுகளுக்காகத் தொடர்ந்தும் கண்காணிக்கப்படும்.

## எனது குழந்தைக்கு ஒரே நேரத்தில் பல தடுப்பூசிகளை போடுவது பாதுகாப்பானதா?

ஒரே நேரத்தில் பல தடுப்பூசிகள் போடுவது பாதுகாப்பானது என்றும், உங்கள் குழந்தையானது இதன்மூலம் சில தீவிர நோய்த்தொற்றுகளிலிருந்து பாதுகாக்கப்படும் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## மேலதிக தகவல்களுக்கு நான் எங்கு செல்ல வேண்டும்?

தடுப்பூசிகள் மற்றும் அவற்றின் பாதுகாப்பு அல்லது பக்க விளைவுகள் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலைகள், சந்தேகங்கள் அல்லது கேள்விகள் இருந்தால், மருத்துவரிடம் (GP) அல்லது ஒரு என்.எச்.எஸ் சுகாதார நிபுணரிடம் பேசவும்.

உலக சுகாதார நிறுவனம், என்.எச்.எஸ் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் போன்ற இங்கிலாந்து மற்றும் பிற இடங்களில் உள்ள உலகின் முன்னணி-சுகாதாரப் பராமரிப்பு நிறுவனங்களிடமிருந்து ஆன்லைனில் ஏராளமான அறிவியல் சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன.

தடுப்பூசிக்கு எதிர்ப்பான கதைகள் பெரும்பாலும் இணையத்தில், குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலம் பரவலாம். அவை அறிவியல் சான்றுகளின் அடிப்படையில் இல்லாமல் இருக்கலாம். அத்துடன் அவற்றை நம்புவது உங்கள் பிள்ளைக்கு கடுமையான நோய் ஏற்படும் அபாயத்தை உண்டாக்கக்கூடும்.

**நம்மையும் நம் குழந்தைகளையும் உடல்நலக்குறைவிலிருந்து பாதுகாக்க நாம் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயம் உரியமுறையில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதாகும் .**

**என்.எச்.எஸ் (NHS) இணையதளத்தில் இதுபற்றி நீங்கள் மேலும் அறிந்து கொள்ளலாம்:**

www.nhs.uk/vaccinations/

# கேட்ச்-அப் தடுப்பூசிகள் உட்பட, தடுப்பூசிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது?

### யார் என்.எச்.எஸ் தடுப்பூசிகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்?

எந்தவொரு குழந்தையும் என்.எச்.எஸ் தடுப்பூசிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள் அல்லது உங்கள் பிள்ளையின் தடுப்பூசிகள் குறித்து அவர்கள் புதுப்பித்த நிலையில் இருக்கிறார்களா என்பதைப் பார்க்க அவரது சிவப்பு புத்தகத்தைப் பார்க்கவும்.

### எனது குழந்தைக்கு வழக்கமான தடுப்பூசிகளைப் பெறுவதற்கு மருத்துவரிடம் (GP) பதிவு செய்ய வேண்டுமா?

உங்கள் குழந்தை ஒரு மருத்துவரிடம் பதிவு செய்யப்படவில்லை என்றாலும்கூட, அவர்களுக்கு இலவச தடுப்பூசிகளைப் பெறுவதற்கு உரிமை உண்டு. இங்கிலாந்தில் உள்ள எவரும் இலவசமாக மருத்துவரிடம் பதிவு செய்துக்கொள்ளலாம். இதற்கு முகவரி ஆதாரமோ அல்லது குடிவரவு நிலை (immigration status), ஐடி அல்லது NHS எண் போன்ற எதுவுமோ உங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் மருத்துவ மையத்தை இங்கே காணலாம்: www.nhs.uk/service-search/find-a-gp

### குழந்தைகளுக்கான தடுப்பூசிகள் பற்றிய கூடுதல் தகவல்களை நான் எங்கே பெற்றுக்கொள்ளலாம்?

மருத்துவ மையத்தை தொடர்பு கொள்ளவும் அல்லது இணையத்தில் பார்க்கவும்:

**selondonics.org/childrenshealth**

### உங்கள் பிள்ளை நோய்வாய்ப்படுதல் தொடர்பான பொதுச் சுகாதார ஆலோசனை

சிறு குழந்தைகள் அடிக்கடி நோய்வாய்ப்படுகிறார்கள் - இது அவர்களது வளர்ச்சியின் ஒரு பகுதியாகும். இருப்பினும், இது பெற்றோருக்கும் பராமரிப்பாளர்களுக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்தகூடிய ஒன்றாகும். பெரும்பாலும், இந் நோய்கள் தீவிரமானவை அல்ல, இவற்றுக்கு குழந்தைக்கு வீட்டிலேயேயோ அல்லது உங்களது மருத்துவர், மருந்தாளர் அல்லது சுகாதார பார்வையாளரின் (health visitor) ஆதரவுடனோ பாதுகாப்பாக உரிய சிகிச்சையளிக்க முடியும். மேலதிக ஆலோசனைகளுக்கு NHS இணையதளத்தைப் பார்க்கவும்: **www.nhs.uk/conditions/baby/health**

இந்த துண்டுப்பிரசுரமானது பெரிய எழுத்திலும் வெவ்வேறு மொழிகளிலும் கிடைக்கிறது.

தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்::
communications@selondonics.nhs.uk

தென்கிழக்கு லண்டன் ஒருங்கிணைந்த பராமரிப்பு வாரியத்தால் (Integrated Care Board) வெளியிடப்பட்டது.
ஜூலை 2025 இல் புதுப்பிக்கப்பட்டது

NHS
South East London

# குறிப்புகள்